# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்

### முன்னிலை : திரு. R.S. மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,

### <u>திட்ட அனுமதி</u>

### நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். **5593/2018/உதிகு-1** நாள்: **19.01.2020**

தி.அ. எண். **06/2020**

உள்ளாட்சியின் பெயர்: கோயம்புத்தூர் மாவட்டம் (மதுக்கரை பேரூராட்சி)

பொருள் : **திட்ட அனுமதி** - **கட்டிடம்** - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - மதுக்கரை வட்டம் - மதுக்கரை பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்.1185/2-ல் **6650.0 சமீ** பரப்பு மனையிடத்தில் உத்தேச தரைத்தளம் + 3 தளங்கள் கொண்ட 4 பிளாக்குகளில் 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் இசைவு பெறப்பட்டது - திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் செயலாணைக் கடிதம் ந.க.எண்.8586/2019/TCP3 நாள் 21.06.2019.
2. மனுதாரர் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், கோயம்புத்தூர் கோட்டம் அவர்கள் கடிதம் ந.க.எண்.3157/SCB/CBE /LA/16 நாள் 30.10.2018, 25.01.2019, 29.05.2019
3. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.10606/2015/ஆ3, நாள். 14.11.2015.
4. உறுப்பினர் செயலர் (பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.5593/2018/உதிகு1, நாள்.23.04.2019.
5. அரசாணை(நிலை)எண்.86, வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.28.03.2012.
6. அரசாணை(நிலை)எண்.85, வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.05.2017.
7. அரசாணை(நிலை)எண்.135, வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.21.07.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயாலணை கடிதம் ந.க. எண் 7486/2009/பிஏ2 நாள்.16.04.2009.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயாலணை கடிதம் ந.க. எண் 21075/2009/பிஏ1 நாள்.27.06.2012.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயாலணை கடிதம் ந.க. எண் 12201/2017/பிஏ1 நாள்.22.09.2017.

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 14227/2017/சிபி, நாள்.14.12.2017.
12. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை கோவை மாவட்டம் கடிதம் மு.மு.எண். 0196/அ1/2016, நாள்.25.1.2016.
13. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண். 01, நாள். 26.09.2019
14. மனுதாரர் நன்னிலை தொகை மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்ட நாள் 10.10.2019
15. செயல் அலுவலர், மதுக்கரை சிறப்பு நிலை பேரூராட்சி, மதுக்கரை கோயம்புத்தூர் அவர்கள் கடிதம் ந.க.எண்.1689/2019/அ2 நாள் 02.01.2020

*****

**உத்தரவு:**

பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் உத்தரவில் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மதுக்கரை பேரூராட்சி மற்றும் கிராமம்,க.ச.எண்.1185/2-ல் **6650.0 சமீ** பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு **"A"** முதல் **"F" வரை** என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச தரைத்தளம் + 3 தளங்கள் கொண்ட 4 பிளாக்குகளில் 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்களுக்கு கட்டுமானங்களின் பரப்பு பின்வருமாறு.

**மனையின் பரப்பளவு : 6650.0 சமீ**
**கட்டிடத்தின் பரப்பு விபரங்கள் :**

| Floor | FSI Area in $m^2$ |
|---|---|
| Ground Floor | 591.52 |
| First Floor | 591.52 |
| Second Floor | 591.52 |
| Third Floor | 591.52 |
| **Total** | **2366.08** |

**FSI Area : 2366.08 x 4 Blocks = 9464.32 சமீ**

| | | | | |
|---|---|---|---|---|
| நன்னிலைத்தொகை | ரூ. | 25,900/- | நாள் | 10.10.2019 |
| வளர்ச்சி கட்டணம் | ரூ. | 1,08,500/- | நாள் | 10.10.2019 |
| கூராய்வு கட்டணம் | ரூ. | 120/- | நாள் | 30.09.2019 |

மேற்கண்ட உத்தேச தரைத்தளம் + 3 தளங்கள் கொண்ட 4 பிளாக்குகளில் 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ./ந.ஊ.இ.எண்.128/2019** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பார்வை 15-ல் கண்டுள்ள கடிதம் மூலம் ஒப்படைப்பு விபரம் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட கட்டுமானத்திற்கு **திட்ட அனுமதி எண்.06/2020** என்ற எண்ணில் **19.01.2020** முதல் **18.01.2025** **வரை 5** (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்காணும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.**

## சிறப்பு நிபந்தனைகள்

| வ.எண் | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|
| 1. | கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 4 வரையிலான 670.89 சமீ பரப்புள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்லுவலகத்திற்கும் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒரு வார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும். |
| 2. | It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations. |
| 3. | Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects /licensed surveyors and the structural engineer associated with the development shall ensure the developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction. |
| 4. | நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்த வில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், |

| | |
|---|---|
| | குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப் படுகிறது.<br><br>சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல. |
| 5. | மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் |
| 6. | The provision in the G.O.(Ms) No. 17 H & UD (UD 4) (3) department dated 5.02.2016 relating to installation and use of solar energy system should be followed. |
| 07. | The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority. |

## பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளுர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ
   (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.
4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.

(ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப் படவேண்டும்.

(ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்

(iii) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

14. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

15. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

16. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

17. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

18. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (**மதுக்கரை பேரூராட்சி உட்பட**) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. **மதுக்கரை பேரூராட்சி** எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**கோயம்புத்தூர் - 12.**

21/1/2020 21.1.2020

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் -2

**பெறுநர்**

செயல் அலுவலர்,
மதுக்கரை பேரூராட்சி,
மதுக்கரை வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)**

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
Coimbatore Division,
No.397-A, North Housing Unit,
Selvapuram,
Coimbatore - 641026

Executive Engineer
T.N.S.C.B-CBE-26

# மதுக்கரை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க.எண் : 664/2020 முன்னிலை: திரு/திருமதி. பார்த்திபன்

க.உரிமம்.எண்:48 /2020–2021 நாள்:23-06-2020

பொருள்: கட்டிட உரிமம் மதுக்கரை பேரூராட்சி – வார்டு எண்: WD-01, திரு.வி.க. சதுக்கம் – கட்டிட சர்வே எண் : 1185/2, மனை எண் : – –ல் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: திரு/திருமதி :செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் த/பெ,க/பெ :– என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண் :71 நாள் :22–06–2020

ஆணை:

மதுக்கரை பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண் : 1185/2, மனை எண் : – – ல் , திரு/திருமதி :செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் ., த/பெ,க/பெ :– என்பவர் தரைதளம் 25496.55 ச.மீ / ச.அ , முதல் தளம் 25496.55 ச.மீ / ச.அ , இரண்டாம் தளம் 25496.55 ச.மீ / ச.அ , மூன்றாம் தளம் 25496.00 ச.மீ / ச.அ , தார்சு கட்டிடம் கட்டிக்கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார். வரைபடம் நகல் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 23-06-2020 முதல் ஐந்து வருட காலத்திற்கு அதாவது 22-06-2025 வரை அமுலில் இருக்கும்.
2. பேரூராட்சி நிலத்தில் அல்லது தெருவில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3. பொதுப்பாதையிலிருந்து 3 மீட்டர் தூரத்தில் நிலையான கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது. சுற்றுச்சுவர் கட்டிக் கொள்ளலாம்.(சுற்றுச்சுவர் 1 மீட்டருக்கு மேற்படாமல்).
4. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.
5. அங்கிகாரம் செய்யப்பட்ட பிளானுக்கு எவ்வித மாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால், முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கொடுக்கப்பட்டுள்ள தவணைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் அதற்கு (30) முப்பது நாட்களுக்கு முன்னதாகவே மனு கொடுத்து நிர்ணயக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி அனுமதி காலவரம்பை நீட்டித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.
7. கட்டிட வேலைநடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
8. கக்கூஸ்,சாக்கடை,தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம் போடப்பட வேண்டும். எளிதாக சுத்தம் செய்ய வசதியாக உள்ளதாகவும் இருக்க வேண்டும்.
9. புது சென்னை சட்டப் பிரிவுகள் 26 மற்றும்–33 விதிகளின் படி அத்தாட்சி பெறாமல் குடியேறவோ குடிவைக்கவோ கூடாது.
10. கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறிய 15 தினங்களுக்குள் அவ்விவரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன்,கட்டிடத்தின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்பி வைக்க வேண்டும்.
11. தற்போது செலுத்தப்பட்ட தொகை பின்பு குறைவெனத் தெரியவந்தால் உடனே மீதித் தொகையை பேரூராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.
12. கட்டிடம் கட்டுமிடத்தில் மழை நீர் சேகரிக்கும் தொட்டி கண்டிப்பாக கட்ட வேண்டும்.
13. சூரிய ஒளியனைப் பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.
14. அனுமதிக்காக வழங்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் ஏதும் பின்னாளில் கண்டறியப்பட்டால் தங்களது கட்டிட உரிம அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் மூன்று நகல்

பெறுநர்,
திரு/திருமதி : செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம்
த/பெ,க/பெ : – ,
WD-01,திரு.வி.க. சதுக்கம்

செயல் அலுவலர்
மதுக்கரை பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

நகல் : வரி வசூலர், மதுக்கரை பேரூராட்சி
( கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக. )

Executive Engineer
T.N.S.C.B-CBE-26



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate